# இயேசு கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழா

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

கிறிஸ்து இயேசுவில் பிரியமானவர்களே, பொதுக்கால நிறைவில் கிறிஸது அரசர் பெருவிழாவை சிறப்பிக்க வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் விழா நல்வாழ்த்துக்களும், வணக்கங்களும்.

“யூதர்களின் அரசராக பிறந்திருக்கிறவர் எங்கே?” என்றே ஞானிகளின் வழியாக இறைமகன் அறிமுகமாகின்றார். கிறிஸ்துவை நாம் நல்லாயனாக, ஒளியாக, மீட்பராக பல்வேறு கோணங்களில் நினைத்துப் பார்த்திருக்கின்றோம், தியானித்திருக்கின்றோம். அவர் அரசர் என்று சொல்லும்போது நம் மனங்களில் சற்று நெருடல் ஏற்படத்தான் செய்கின்றது. ஆனால் இயேசுவும் ஓர் அரசர். அவரின் அரசில் அரண்மனை, சிம்மாசனம், கோட்டைகள், படைவீரர்கள் என எதுவும் கிடையாது. “பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரியவே” என்று தன்னையே தாழ்த்தி, தந்தையின் திருவுளம் ஏற்று பாவிகளைத் தேடி இத்தரணியை வாழ வைக்க, மீட்க வந்தவர். அவரின் அரசு மிக வித்தியாசமானது. அவரின் செயல்பாடுகளும் வித்தியாசமானது. எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்க, ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கிட, பாவச் சிறையிலிருப்போர்க்கு விடுதலை அளித்திடுவதுவே அவரது அரசின் நோக்கமாகும். அதுவே அவரின் உயிர்மூச்சுமாகும்.

அவரின் இறையாட்சியில், சிறுபிள்ளைகள், ஏழையர், வரிதண்டுவோர், பாவிகள் அனைவரும் உட்படுவர். ஏனெனில் அவர்கள் இறைவன் அனுப்பிய அவரது ஒரே ஏக மைந்தனை முழுமையாக விசுவசித்தனர். நல்லதொரு மனமாற்றத்தை பெற்றுக் கொண்டு, அவரை மீட்பராக ஏற்றுக் கொண்டனர். இறையாட்சி என்பது உண்பதும், குடிப்பதுமல்ல, அது அன்பு, உண்மை, நீதியின் அடிப்படையில் அமைந்த ஒன்று. இறையாட்சி நம் நடுவே, நம்மிடையே உள்ளது என்பதை மறந்தவர்களாக, உணராதவர்களாக இறைவனையும், இறையாட்சியையும் நாம் தேடிக் கொண்டிருக்கின்றோம், “சின்னஞ்சிறியவர்க்கு செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்” என்று கூறி தம் வலப்புறம் அமரும் பேற்றினை உதவி புரிந்தவர்களுக்கே உரித்தாக்குவார். இறைத்திருவுளத்தை நிறைவேற்றுபவர்களே அவரது ஆட்சியில் பங்குபெற முடியும் என்பதை உணர்ந்தவர்களாக, இறையாட்சியின் விழுமியங்களான அன்பு, உண்மை, நீதி இவற்றை நம் வாழ்வாக்கிட அமைதியின் அரசர், நீதியின் அரசரானவரிடம் அருள் வேண்டி, இத்தெய்வீகத் திருப்பலியில் நம்மையே அர்ப்பணிப்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நல்லாயனாக எங்களை வழிநடத்தி வரும் இறைவா,

திருச்சபையை வழிநடத்த உம்மால் அர்ச்சிக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவியர் அனைவருக்கும் நல்ல உடல், உள்ள நலன் தந்து, அவர்கள் ஏறெடுத்துச் செய்கின்ற இறையன்புப் பணிகளை சிறப்புற செய்திட உமது ஆசீரை நிறைவாகத் தந்தருளும். உமது ஆவியினால் நிரப்பி, அவர்கள் உம் தலைமைத்துவ பண்புகளை தம்மிலே கொண்டு வாழவும், மக்களையும் அதன் வழியில் வழிநடத்திடவும் வேண்டிய வல்லமையை அவர்களுக்கு அளித்து காத்து வழிநடத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அரசர்களுக்கெல்லாம் அரசரான இறைவா,

உலக நாடுகள், அரசியல் மற்றும் பல்வேறு குழுக்களில் உள்ள தலைவர்கள் தங்கள் பணிகளை கடமைக்காக, காசுக்காக செய்திடாமல், பொறுப்பை உணர்ந்தவர்களாக, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக பல வளர்ச்சி நிறைந்த முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டி, அவற்றை முழுமையாக செயல்படுத்தவும், தன்னலமற்றவர்களாக, ஏழை, எளியோரின் வாழ்வு ஏற்றம் பெறச் செய்திடக் கூடிய பரந்த மனதும், பிறர்நலச் சிந்தனையும் உள்ளவர்களாக, தன்னை அர்ப்பணித்து வாழ்ந்திடக் கூடிய வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. மாட்சியுறும் செயல்களைச் செய்திடும் இறைவா,

எங்கள் வாழ்வின் பல்வேறு வேதனை நிறைந்த தருணங்களில், நோய்களில் உம்மை மறந்து, மறுதலித்து, உம்மை விட்டு விலகி நிற்கின்றோம். ஆனால், எங்கள் வாழ்வில் நினைத்துப் பார்க்க இயலாத மாற்றங்களையும். அற்புதங்களையும் உம்மால் மட்டுமே வழங்க முடியும் என்பதை உணர இயலாத மந்த உள்ளத்தினராகவே வாழ்ந்து வருகின்றோம். அத்தகைய விசுவாசம் குறைந்த தருணங்களுக்காக மன்னிப்பு வேண்டி, உமது திருவுளமே எங்கள் வாழ்வில் நிறைவேறும் என்பதை உணர்ந்து எங்கள் இறைவிசுவாசம் ஆழமாக வளர்ந்திட வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. வார்த்தை மனுவுருவான இறைவா,

“எங்கள் காலடிக்கு உம் வாக்கே விளக்கு” என்பதை அறிந்திருந்தாலும் அதை எங்கள் வாழ்வில் செயல்படுத்த இயலாத இயல்புடையவர்களாக வாழ்கின்றோம். உம் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்காது, பல்வேறு உலகப் போக்கிலான மாய

கவர்ச்சிகளில் மயங்கி நிற்கின்றோம். இத்தகைய தவறான மனநிலையை மாற்றி, நீர் ஒருவரே எங்கள் வாழ்வின் மையம் என்பதை ஆழமாக விசுவசித்து, உம் வாழ்வு தரும் வார்த்தையை வாசித்திட, அதன்வழி வாழ்ந்திடக் கூடிய உறுதியான உள்ளத்தினைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. மாபெரும் விடுதலையின் சக்தியாகிய இறைவா

எங்கள் ஊனியல்பின் இச்சைகளினால் பல்வேறு பாவ வலைகளில் வீழ்ந்து உம் திருஇருதயத்தை காயப்படுத்திக் கொண்டே இருக்கின்றோம். எங்கள் பலவீனங்கள், வலுவின்மையினால் எங்கள் முயற்சிகளிலே சோர்வடைந்து தோற்று விடுகின்றோம். இதையே காரணம் காட்டி எங்கள் குற்றங்களை நியாயப்படுத்தாமல், மனசாட்சிக்குக் கட்டுப்பட்டவர்களாக, எங்கள் வலுவின்மையிலிருந்து விடுபட்டு, உம் வல்லமையினால் நாங்கள் தூயதோர் உள்ளத்தைப் பெற்று, பாவ இருளிலிருந்து, ஒளியின் பிரகாசமான பாதையிலே பயணித்து, உம் மனதை மகிழச் செய்திடக் கூடியவர்களாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com